# மரணம்

*மரணம் என்பது மனத்துயரம் தரும் பாடக் கருத்தாக முடியும், ஆனால் நாம் அதை எதிர்கொண்டே ஆக வேண்டியுள்ளது. தன் முன்னிலையில் மரணம் என்ற வார்த்தையைக் குறிப்பிட அனுமதிக்காத மனிதர் ஒருவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதைப் பற்றிய எந்த ஒரு ஆலோசனையுடனும் தொடர்புடைய எல்லாவற்றையும் அவர் தவிர்த்து விட முயற்சி செய்தார், ஆனாலும் தாம் மரிப்பதிலிருந்து அவர் தம்மைத் தடுத்துக் காத்துக்கொள்ள முடியாமல் போயிற்று. மரணம் என்பது ஒரு கனவுதான் என்று கருத்துக் கூறும் வகையில் கவிதைகள் பல எழுதப்பட்டிருந்தாலும், மரணம் தனது கொடுக்கைக் கொண்டதாகவே இருக்கின்றது. அது அச்சமூட்டும் ஒரு உண்மை நிலையாக இருக்கின்றது. அதை நாம் தொடர்பு கொள்ளாமல் தவிர்த்து விட முடியாது. நமது வாழ்வின் மீது அது எழுதப்பட்டுள்ளது. சரீரப் பிரகாரமான மரணத்தைப் பற்றிய கருத்தைப் படிப்பதோடு மட்டும் நமது பாடத்தை சுருக்கிக் கொள்ள நாம் விரும்புவதில்லை; மாறாக, வேதவசனங்களில் இவ்வார்த்தை கொண்டுள்ள பரந்த தனிச் சிறந்த குறிப்புகளை நாம் கவனிப்போம்.*

## எல்லாரும் ஒருமுறை மரித்திருக்கின்றோம்

*எல்லா மக்களும் ஒருமுறை மரித்திருக்கின்றனர். இது எப்பொழுது, எப்படி நடைபெற்றது? ஒருவர் பாவியாகின்ற பொழுது, அவர் தேவனுடைய பார்வையிலிருந்து மறைந்து போகின்றார். பாவம் மரணத்தை உண்டாக்குகின்றது (யாக். 1:15). பாவத்தில் வாழுதல் என்றால் மரித்தவர்களாயிருத்தல் என்று அர்த்தமாகும் (1 தீமோ. 5:6). எல்லா மக்களும் பாவம் செய்துள்ளபடியால் (ரோமர் 3:23) இவ்வகையில் நாம் யாவரும் மரித்திருத்தின்றோம்.*

*இது பிறந்த குழந்தைகளையோ அல்லது சிறுபிள்ளைகளையோ உள்ளடக்குவதில்லை, ஆனால் இது தனது செயல்களுக்குக் கணக்கொப்புவிக்கப் பொறுப்புடைய தனிநபர் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையதாகும். குழந்தைகள் பிறக்கும் பொழுதே பாவத்தில் மரித்தவர்களாய்ப் பிறக்கின்றனர் என்று சிலர் போதித்துள்ளனர். ஆனால் வேதாகமம் இதைப் போதிப்பதில்லை. "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே. 18:4) என்று நாம் வாசிக்கின்றோம்.*

*வேதாகமத்தில் காணப்படும் பாவத்திற்கான விளக்கமானது*

(1 யோவா. 3:4; யாக். 4:17) அது நாம் செய்கின்றவை அல்லது செய்யத் தவறுகின்றவை - நாம் சுதந்தரித்துக் கொள்ளுகின்றவையல்ல - என்று காண்பிக்கின்றது. இந்த மரணம் ஒரு குறிப்பிட்ட வயதில் ஏற்படுகிறதென்று நான் கூற முயற்சி செய்வதில்லை, ஏனெனில் வேதாகமம் இதற்கு எந்த ஒரு வயதையும் குறிப்பிடுவதில்லை. மாறுபட்ட நபர்களின் விஷயங்களில் இது மாறுபடும் என்பதில் ஐயமில்லை.

இது ஏன் மரணம் என்று குறிப்பிடப்படுகின்றது? ஏனென்றால் ஆத்துமாவானது தேவனிடத்திலிருந்து பிரிந்து ஆக்கினைக்குள்ளாகும் நிலையில் இருக்கின்றது. அது ஆவிக்குரிய வாழ்வில், தேவனுடன் உள்ள ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்படுகின்றது. ஏவப்பட்ட எழுத்தாளர்களால் கூறப்பட்ட பல கூற்றுகள் இப்போது தெளிவாகின்றன. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் அவர்கள் தங்கள் பாவங்களில் மரித்தவர்களாயிருந்தார்கள் என்று கூறினார் (எபே. 2:1). அதையே அவர் கொலோசெயர்களுக்கும் கூறினார் (கொலோ. 2:13). கிறிஸ்தவர்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்களென்று யோவான் கூறினார் (1 யோவா. 3:14). இது (விலக்கப்பட்ட மரத்தின் கனியை) ஆதாமும் ஏவாளும் புசித்த பொழுது எப்படி மரித்தார்கள் என்பதையும் தெளிவாக்குகின்றது. ஆவிக்குரிய மரணத்தின் கருத்தை நாம் புரிந்து கொள்ளும் பொழுது, இயேசுவால் உரைக்கப்பட்ட அற்புதமான கூற்றொன்று கடைசியில் இதன் கருத்தை நமக்கு விளக்குகின்றது: “மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (யோவா. 5:25).

பாவத்தில் மரித்த நிலையில் இருக்கும் ஒரு நபர் சரீரத்தில் மரித்துக் கொண்டிருந்த தனது நண்பர் ஒருவரைக் காணச் சென்றார். சென்றவர் ஆழமான முறையில் பரிதாபப்பட்டார், ஆனால் மரித்துக் கொண்டிருந்தவரோ ஒரு உண்மையான கிறிஸ்தவராய் இருந்தார். உண்மையில் அந்தக் கிறிஸ்தவர் தனக்காகப் பரிதாபப்பட்ட அந்த நபரைக் காட்டிலும் எவ்வளவோ மேலான நிலையில் இருந்தார்.

## சிலர் இருமுறை மரித்திருக்கின்றனர்

நம்மில் கிறிஸ்தவர்களானவர்கள், அப்படியானதில் மரித்திருக்கின்றோம். முன்பு நாம் பாவத்தில் மரித்திருந்தோம், இப்பொழுது கிறிஸ்தவர்களானதில் நாம் பாவத்திற்கு மரித்திருக்கின்றோம். “ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள்” (கொலோ. 3:3) என்று பவுல் கூறினார். ரோமர் 6:3, 4ல் உள்ள அற்புதமான வார்த்தைகளை நினைவுகூருங்கள், அதில் ரோமக் கிறிஸ்தவர்கள் ஏன் பாவத்தில் வாழும்படி செல்ல முடியாதிருந்தது என்பதைப் பவுல் காண்பித்தார். அவர்கள் தேவனுடைய பிள்ளைகளானதைப் பவுல் பின்னோக்கிச் சுட்டிக்காட்டினார். அவர்கள் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தில் அடக்கம்

பண்ணப்பட்டு, புதிய ஜீவனுக்கு எழுப்பப்பட்டதாகப் பவுல் கூறினார். இந்தப் புதிய ஜீவனானது ஞானஸ்நானம் வரையிலும் பெறப்பட்டதில்லை என்று இது திட்டவட்டமாய்க் காண்பிக்கின்றது, ஆனால் இது மரணம் என்று குறிப்பிடப்படுவது ஏன்? ஏனென்றால், தேவனுடைய பிள்ளைகளாகும் பொழுது, நாம் நம்மைப் பழைய பாவ வாழ்விலிருந்து பிரிக்கின்றோம். பழைய மனிதன் சிலுவையில் அறையப்படுகின்றான்.

## எல்லாரும் சரீரப் பிரகாரமாக மரிப்போம்

"அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே'' (எபி. 9:27); ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, ..." (1 கொரி. 15:22). இதுவே ஆவியானது சரீரத்தை விட்டுச் செல்லும் போது நடக்கும் சரீரப்பிரகாரமான மரணம் ஆகும். "ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது ..." (யாக். 2:26).

மனித குலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளது என்றும் விரைவில் அது நிறைவேற்றப்படும் என்றும் உணர்வது பலருக்குக் கடினமாகக் காணப்படுகின்றது. வாழ்வின் குறுகிய தன்மை மற்றும் மரணத்தின் நிச்சயம் ஆகியவற்றை நமது மனதில் ஆழமாய்ப் பதிய வைப்பதற்கு வேதாகமம் பல உருவகங்களைப் பயன்படுத்துகின்றது. "எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்" (சங். 90:10). ஒரு குறுகிய காலத்திற்குள், நம்மில் ஒவ்வொருவரும் மறக்கப்பட்ட மரித்தவர்களின் நித்திரையில் நித்திரை கொண்டிருப்போம். காணப்படாத மறுவுலகமானது வெகு தொலைவில் இல்லை. மாம்சத்தின் மிக மெல்லிய திரை மட்டுமே அதைப் பிரிக்கின்றது. ஒரு கணத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாம் அங்கு இருப்போம். ஒரு நாளிலே கிறிஸ்து இந்தச் சத்துருவை ஒழிப்பார் (1 கொரி. 15:26), ஆனால் அது வரையிலும் மக்கள் மாம்சப் பிரகாரமாக மரித்தேயாக வேண்டும்.

## சிலர் "இரண்டாம் மரணத்தை" எதிர் கொள்ளுவார்கள்

நாம் கலந்துரையாட வேண்டிய கடைசி மரணமானது வேதவசனங்களில் "இரண்டாம் மரணம்'' (வெளி. 20:14; 21:8) என்று அழைக்கப்படுகின்றது. இது நித்தியமான மரணம் ஆகும். இது மரணம் என்று அழைக்கப்படுவது ஏன்? மறுபடியும், பிரிதல் என்பதே கருத்தாகும்; இழந்துபோகப்பட்டவர்கள் தேவனிடமிருந்தும், ஆவிக்குரிய வாழ்விலிருந்தும் நித்தியமாக பிரிக்கப்படுவார்கள். இந்த மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் எதுவும் இல்லை. இது வாழ்கின்ற ஒரு மரணமாக, மரிக்கின்ற ஒரு வாழ்வாக இருக்கும். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் யாவரும் நித்தியமும் இருப்பார்கள், ஆனால் நித்திய ஜீவனுக்குள் இருக்க

*மாட்டார்கள். ஜீவன் என்றால் தேவனுடன் ஐக்கியமாயிருத்தல் என்று அர்த்தமாகும்.*

## *முடிவுரை*

*இயேசு மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கின்றார் (வெளி. 1:18). அவர் மரணத்தை வெற்றி கொண்டு, அதன் மீது வல்லமையுடையவராய் இருக்கின்றார். அவர் திறவுகோல்களை உடையவராய் இருக்கின்றார். நான் சிறைச்சாலைகளைப் பார்வையிட்டிருக்கின்றேன், ஆனால் சாவிகளை வைத்துள்ள மனிதர் ஒருவருடன் நடந்து செல்லும் வரையிலும் நான் பயம் கொண்டிருந்ததில்லை. யோவானிடத்தில் இயேசு, "... இதோ, ... நான் ... திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'' என்று கூறினார். மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவருடன் நடந்து செல்லுதல் என்பது பயத்தை நீக்குகின்றது. இயேசு நமது நண்பராயிருந்தால், நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால், நாம் "மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்" பயப்படத் தேவையில்லை (சங். 23:4). அவரது கோலும் தடியும் - மற்றும் திறவுகோல்களும் - நம்மைத் தேற்றும்.*